ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2193/50 - 2020 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.09.18

*2193/50 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது இல.: මීරි/ප්‍රා.ලේ/ඉ/5/42/2013.*
*காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2013/D/345.*

*ஸ்ரீ லங்கா சிங்ஹ ரெஜிமென் படைப்பிரிவு முகாமிற்கு காணி எடுத்துக்கொள்ளல் - அம்பேபுஸ்ஸ நூலகத்தின் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.*

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மீரிகம பிரதேச செயலாளர் பிரிவில், உடுகஹபத்துவே கீனதெணிய கிராம அலுவலர் பிரிவில், தென்னகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை யாளர் நாயகத்திற்குப் பதிலாக கம்பஹா மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2017.06.27 ஆந் திகதிய கம். 3967 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 01 மற்றும் 02 எனக் காட்டப்பட்ட 0.5063 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் :*

***வரைபட இல. 3967***

***01. துண்டு இல. 01***
*காணியின் பெயர் : கீனதெனிகந்த; விபரம் : வீட்டுத்தோட்டம், சுமார் 50 வருட வயதிலான தென்னை மரங்கள் 17 உம், சுமார் 15 வருட வயதிலான மஹோகனி மரங்கள் 8 உம் மற்றும் சுமார் 12 வருட வயதிலான பலா மரங்கள் 5 உம் மற்றும் சுமார் 10 வருட வயதிலான ஹல்மில்ல மரங்கள் 2 உம் காணப்படுகின்றன; ஆரம்ப உரிமை கோருவோர் : ஈ. ஏ. லயனல்; விஸ்தீரணம் : 0.4224 ஹெக்டயார்.*

***02. துண்டு இல. 02***
*காணியின் பெயர் : கீனதெனிகந்த; விபரம் : வத்தை (நி. அ. ஆ. வ. 75 துண்டு இல. 18 இன் பகுதி) பிரவேசிக்கும் வீதிக்காக ஒதுக்கப்பட்ட காணியினை அம்பேபுஸ்ஸ இலங்கை ரெஜிமென் நிலையத்தில் நிர்மானிப்பதற்காக தேவைப்படுதல்; ஆரம்ப உரிமை கோருவோர் : - ; விஸ்தீரணம் : 0.0839 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு மீரிகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட*

விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. பீ. பிரசாத் இந்திக,
பிரதேச செயலாளர்,
மீரிகம.

பிரதேச செயலகம்,
மீரிகம,
2020, செத்தெம்பர் 11.

10 - 133

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KOT/LND/ACQVI/01/81.
காணி அமைச்சின் தொ. இல.: 4-3/3/2019/FR/202.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தின், கொட்டபொல பிரதேச செயலாளர் பிரிவின் 241 H, கந்தில்பான கிராம அலுவலர் பிரிவின் கிரிவெல்தொல கிராமத்தில் அமைந்துள்ள, அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதி நில அளவைப் பட இல. 125 இல் 12 ஆம் பத்திரத்தில் 12 ஆம் மேலதிக இலக்கத்தில் காணத் துண்டு இல. 86 ஆகவுள்ள 11.4960 விஸ்தீரணமுடைய மாணிக்கவத்த என்னும் காணித் துண்டின் எல்லைகள் பின்வருமாறு :

**1. துண்டு இல. 86 - காணியின் பெயர் : மாணிக்கவத்த; உரிமை கோருவோர் : ஏ. டீ. தலுவத்த டீ எஸ்டேட் (தனி) கம்பனி; விஸ்தீரணம் : 11.4960 ஹெக்டயார்**

வடக்கு : சப்பிரகமுவ மாகாணம் மற்றும் காணித் துண்டு இல. 48; கிழக்கு : காணித் துண்டு இல. 1 மற்றும் 48; தெற்கு : கெ. மெ. மு. பி. 23 இல் காணித் துண்டு இல. 73; மேற்கு : சப்பிரகமுவ மாகாணம் மற்றும் காணித் துண்டு இல. 48.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு கொட்டபொல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கணேச அமரசிங்க,
பிரதேச செயலாளர்,
கொட்டபொல.

பிரதேச செயலகம்,
கொட்டபொல,
2020, செத்தெம்பர் 14.

10 - 134

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.